# "காலிங்கராயன்" நினைவு அஞ்சல் தலை

12 ஆண்டு காலம் முயன்று கி.பி. 1270 ஆம் ஆண்டு தொடங்கி கி.பி.1282 ஆம் ஆண்டு தை 5 ஆம் நாளில் அணை கட்டி, கால்வாய் வெட்டி முடித்ததாகக் கல்வெட்டு ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. பவானி, நொய்யல், அமராவதி மூன்று ஆறுகளையும் வாய்க்கால் மூலம் இணைக்க முற்பட்ட, நதிகள் இணைப்பின் முன்னோடியாகத் திகழும் காலிங்கராயன் நாளாகக் கொண்டாடும் தை 5ல் அவரின் நினைவு அஞ்சல் தலை வெளியிட மத்திய, மாநில அரசுகள் முற்பட வேண்டும் என தொல்புதையல் சார்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

ஆசிரியர்



## கண்டுபிடியுங்களேன்

இச்சிற்பம் அமைந்துள்ள ஊர், கோவில், காலம் சரியாகக் கணித்து வைத்துக்கொள்ளுங்கள். விடை அடுத்த இதழில் சரிபார்த்துக் கொள்ளலாம்.

- ஆசிரியர்

# வரவேற்கிறோம்.

புதையல் இதழ் வளர்ச்சிக்கு தங்களிடமிருந்து நன்கொடை / சந்தா தொகையை எதிர்பார்க்கிறோம். தொல்புதையல் பெயரில் M.O./D.D./Cheque ஆகவோ மேற்கண்ட வெளியீட்டாளர் முகவரிக்கு அனுப்பலாம்.

- வெளியீட்டாளர்